12.11.15

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

**மழையால் அணைகளில் உயருகிறது நீர்மட்டம்**

மதுரை:மழையால் தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால் இரு போக விளைச்சலுக்கு தண்ணீர் கிடைக்குமா என்ற எதிர்பார்ப்புள்ளது. கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில், இதே நாளில் பெரியாறு அணை நீர் மட்டம் கூ அடி குறைவாக உள்ளது. நீர்வரத்து (கன அடி)பெரியாறு அணைக்கு நீர் வரத்து வினாடிக்கு 1012 கன அடி. வெளியேற்றம் ருகக கன அடி. வைகைக்கு நீர் வரத்து 704. வெளியேற்றம் 60. மஞ்சளாறு நீர் வரத்து 240.வெளியேற்றம்240.

மருதாநதி நீர் வரத்து 57. வெளியேற்றம் இல்லை. சோத்துப்பாறைக்கு நீர் வரத்து 15, வெளியேற்றம் 15. சண்முகாநதிக்கு வரத்து 10. வெளியேற்றம் இல்லை.

**வங்க கடலில் மீண்டும் காற்று அழுத்த தாழ்வு நிலை**

சென்னை:"வங்க கடலில், மீண்டும் காற்று அழுத்த தாழ்வு நிலை உருவாவதால், இந்த வார இறுதியில், சென்னை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில், கனமழை பெய்யும்," என, வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

மைய இயக்குனர் ரமணன் கூறியதாவது:வங்க கடலில் உருவான காற்று அழுத்த தாழ்வு மண்டலத்தால், சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில், கனமழை பெய்தது. கடலூார் அருகே, நவ., 8ல் கரையை கடந்த காற்று அழுத்த தாழ்வு மண்டலம், வேலூார் அருகே நிலை கொண்டதால், வட மாவட்டங்களில், பரவலாக தொடர்ந்து மழை பெய்து வந்தது.

தற்போது இந்த தாழ்வு மண்டலம், கேரளாவை நோக்கி நகர்ந்து வருகிறது. இதனால், தென் மாவட்டங்களில், இன்று மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. இந்நிலையில், அந்தமான் அருகே மீண்டும், ஒரு காற்று அழுத்த தாழ்வு நிலை உருவாகிறது.

இது, குறைந்த காற்று அழுத்த தாழ்வு மண்டலமாக, அடுத்த இரு நாட்களில் வலுப்பெறலாம். அதனால், நவ., 15 முதல், சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் மீண்டும் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

நேற்று காலையுடன் முடிந்த, 24 மணி நேரத்தில், வேலூார் மாவட்டம், ஆம்பூரில் அதிகபட்சமாக, 8 செ.மீ., மழை பெய்துள்ளது. சேலம் மாவட்டம், ஏற்காடு - 6; நீலகிரி மாவட்டம் ஊட்டி - 5; கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர், ஈரோடு மாவட்டம், கோபி, சிவகங்கை மாவட்டம், இளையான்குடி - 4 செ.மீ., மழை பெய்துள்ளது.

கூடுதல் மழை:தமிழகத்தில், வடகிழக்கு பருவ மழை துவங்கிய பின், நவ., 1 முதல், 11 நாட்களில், சராசரியை விட கூடுதல் மழை பெய்துள்ளது.'அக்டோபரில் துவங்கி டிசம்பரில் முடிவடையும், வட கிழக்கு பருவ மழை காலத்தில், எதிர்பார்த்ததை விட கூடுதலாக பெய்ய

வாய்ப்பு உள்ளது' என, வானிலை ஆய்வு மையம் ஏற்கனவே கணித்து இருந்தது.

ஒரு வாரம் தாமதமாக, அக்டோபர், 27ல் பருவ மழை துவங்கியது. ஆனாலும், நவ., 1 முதல், நேற்று வரை, தமிழகத்தில் பெய்த மழை குறித்து, வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கை:

வடகிழக்கு பருவ மழை காலத்தில், நவ.,1 முதல், 11 வரை, சராசரியாக, 26 செ.மீ., மழை பெய்ய வேண்டும். ஆனால், 30 செ.மீ., மழை பெய்துள்ளது. நெல்லையில் அதிகபட்சமாக, சராசரி மழை அளவை விட, 71 சதவீத அளவுக்கு கூடுதலாக, மழை பதிவாகி உள்ளது.

எனினும், 11 மாவட்டங்களில், சராசரிக்கும் குறைவாக மழை பெய்துள்ளது. இதில், விருதுநகர், மதுரை, தேனி, சிவகங்கை மாவட்டங்களில் சராசரியை விட, 30 சதவீத அளவுக்கு, மழை குறைவாக பதிவாகி உள்ளது. புதுச்சேரியில், 11 நாட்களில், 46 செ.மீ., மழை பெய்ய வேண்டும். ஆனால், 37 செ.மீ., மழை தான் பெய்துள்ளது.

**தக்காளி, மிளகாய் நாற்று விலை அதிகம்**

அரசு நாற்றுப்பண்ணையில் தக்காளி, மிளகாய் நாற்று, தனியாரை விட நான்கு மடங்கு விலை அதிகமாக விற்கப்படுவதன் காரணத்தை கண்டறிய வேண்டும்' என, வேளாண் துறை முதன்மை செயலருக்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. தமிழக விவசாயிகள் சங்க பொதுச்செயலாளர் கந்தசாமி, தமிழக வேளாண் துறை முதன்மை செயலருக்கு அனுப்பியுள்ள மனுவில், கூறியிருப்பதாவது:

தமிழகத்தில், அரசு தோட்டக்கலைத்துறை மூலம், தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ், தக்காளி, மிளகாய் நாற்றுகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. ஒரு விவசாயிக்கு ஒரு எக்டருக்கு, 20 ஆயிரம் ரூபாய்

மானியம் வழங்கப்படுகிறது. சேலம் மாவட்டம் கருமந்துறை அரசு நாற்றுப்பண்ணையில் நாற்றுக்கள் வாங்க வேண்டும், என, விவசாயிகள் நிர்பந்தப்படுத்தப்படுகின்றனர். அரசு பண்ணையில் ஒரு நாற்று, 1.50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அங்கிருந்து வேறு பகுதிக்கு கொண்டு செல்ல கூடுதலாக போக்குவரத்து செலவு ஏற்படும். விவசாயி நாற்றுக்கு, 40 ஆயிரம் ரூபாய் செலவிட்டு, 20 ஆயிரம் ரூபாய் மானியம் பெறும் நிலை உள்ளது. ஆனால், உள்ளூரில் உள்ள தனியார் நாற்றுப் பண்ணைகளில், நாற்று ஒன்று, 35 - 40 பைசா வீதம் விற்பனை செய்யப்படுகிறது. இதனால், விவசாயிகளுக்கு, எட்டாயிரம் முதல் 10 ஆயிரம் ரூபாய் மட்டுமே செலவு ஏற்படுகிறது. தனியார் பண்ணையில் வாங்க அனுமதிக்க வேண்டும். அல்லது, அரசு நாற்றுப்பண்ணையில் விலையை குறைக்க வேண்டும். இவ்வாறு, மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தளும்பும் தடுப்பணைகள்: விவசாயிகள் மகிழ்ச்சி

மேட்டுப்பாளையம்: பெய்து வரும் கனமழை காரணமாக, காரமடை ஒன்றியத்தில் கட்டியுள்ள, 75க்கும் மேற்பட்ட தடுப்பணைகள் மற்றும் பண்ணைக்குட்டைகள் நிரம்பி வழிகின்றன.

காரமடை ஒன்றியத்தில், 17 ஊராட்சிகளில், 50க்கும் மேற்பட்ட சிறிய தடுப்பணைகள், பண்ணைக்குட்டைகளும், 25க்கும் மேற்பட்ட பெரிய தடுப்பணைகளும் கட்டப்பட்டுள்ளன. மழைக் காலத்தில், தேங்கி நிற்கும் தண்ணீரால், சுற்றுப்பகுதிகளில் உள்ள விவசாய கிணறுகளுக்கு நீர் ஊற்று கிடைக்கிறது. வடகிழக்கு பருவமழையால், காரமடை ஒன்றியம் மற்றும் மேட்டுப்பாளையம் பகுதிகளில் கனமழை பெய்து வருகின்றன. கடந்த ஒரு வாரமாக தொடர்ந்து மழை பெய்து வருவதால், பள்ளங்கள்,

ஓடைகளில் பெருக்கெடுத்தும் வரும் வெள்ளத்தால், அனைத்து தடுப்பணைகளும், பண்ணைக் குட்டைகளும் நிரம்பி வழிகின்றன.

காரமடை ஒன்றியத்தில் உள்ள அனைத்து தடுப்பணைகளும் நிரம்பியதால், விவசாய கிணறுகளிலும் நீர்ஊற்று பெருக்கெடுத்துள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## 12 ஆண்டுகளுக்கு பிறகு பாலாற்றில் வெள்ளம்: விவசாயிகள் மகிழ்ச்சி

வேலூர்: 12 ஆண்டுகளுக்கு பிறகு, பாலாற்றில் வெள்ளம் வந்ததால் பொது மக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

வேலூர் மாவட்டத்தில், கடந்த, 4 நாட்களாக கன மழை பெய்து வருகிறது. இதனால், மாவட்டத்தில், திருப்பத்தூர் சுற்று வட்டாரத்தில் உள்ள, 12 ஏரிகள் நிரம்பி வழிகிறது. 50க்கும் மேற்பட்ட ஏரிகள் வேகமாக நிரம்பி வருகிறது. ஆம்பூர் அடுத்த பள்ளிகொண்டா பாலாற்றில், நேற்று காலை, 8 மணியில் இருந்து தண்ணீர் வரத்தொடங்கியது. மதியம், 3 மணிக்கு, வேலூர் அருகே மேல்மொணவூர் வரை வெள்ளம் வந்தது. 12 ஆண்டுளுக்கு பிறகு பாலாற்றில் வெள்ளம் வந்ததால், பொது மக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மாவட்டத்தில், பஞ்சாயத்து கட்டுப்பாட்டில், 3 ஆயிரம் ஏரி, குளம், குட்டைகள் உள்ளது. இங்கு நீர் பிடிப்பு பகுதிகளில் உள்ள ஆக்கரமிப்புக்களை அகற்றி, ஏரிகளை தூர் வாரினால், முழு அளவில் பாலாற்றில் தண்ணீர் வரும் என சமூக ஆர்வலர்கள் கூறினர்.

## 10 ஆண்டுகளுக்கு பிறகு ஆண்டியப்பனூர் அணை நிரம்பியது: விவசாயிகள் மகிழ்ச்சி

வேலூர்: ஆண்டியப்பனூர் அணை, 10 ஆண்டுகளுக்கு பிறகு நிரம்பியதால், 25க்கும் மேற்பட்ட கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

வேலூர் மாவட்டத்தில், நான்கு நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், வாணியம்பாடி அருகே உள்ள ஆண்டியப்பனூர் அணை, 10 ஆண்டுகளுக்கு பின் நேற்று நிரம்பியது. 30 அடி கொள்ளளவு கொண்ட அணை நிரம்பியதால், கடல் போல காட்சியளிக்கிறது. இதனால் ஆலங்காயம், ஆண்டியப்பனூர், மிட்டூர், குரிசிலாப்பட்டு உட்பட, 25க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். திருப்பத்தூர் பகுதியில் மடவாளம், கொடுமாம்பள்ளி, சிலந்தப் பள்ளி, பொம்மி குப்பம், அந்தநேரி, மடப்பள்ளி என, 50 ஏரிகளும் நிரம்பியுள்ளன. நேற்று ஆம்பூரில், அதிகபட்சமாக, 79 மி.மீ., மழை பெய்தது. வாணியம்பாடி, 45, ஆலங்காயம், 38, திருப்பத்தூர், 33, மேலாலத்தூர், 30, குடியாத்தம், 28, வேலூரில், 25 மி.மீட்டர் மழை பெய்தது. ஆற்காடு அடுத்த வாழப்பந்தல் அருகே தோணிமேட்டைச் சேர்ந்தவர் பசுபதி. இவர் மகள் பரிமளா, 35, மாப்பிள்ளை மணி, 40, தீபாவளிக்காக வீட்டுக்கு வந்திருந்தனர். நேற்று, 9 மணிக்கு வீட்டு முன்பு பரிமளா உட்கார்ந்திருந்தார். அப்போது அங்கிருந்த மரக்கிளை உடைந்து பரிமளா மீது விழுந்தது. இதில் படுகாயமடைந்த பரிமளா இறந்தார். மணி கொடுத்த புகாரின் படி, ஆற்காடு போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

கலெக்டர் நந்தகோபால் கூறியது: வேலூர் மாவட்டத்தில் தொடர் மழைக்கு, 112 வீடுகள் சேதமடைந்ததுள்ளது. 20 வீடுகள் இடிந்து

விழுந்தது. 11 கால்நடைகள் இறந்துள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**கண்டாச்சிபுரத்தில் ஏரிகள் நிரம்பியது**

கண்டாச்சிபுரம்: கண்டாச்சிபுரம் பகுதியில் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ஏரிகள் நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

கண்டாச்சிபுரம் அடுத்த அடுக்கம், வீரங்கிபுரம், மடவிளாகம், கண்டாச்சிபுரம் தாங்கல், சித்தாத்தூர் உள்ளிட்ட ஏரிகள் கடந்த நான்கு ஆண்டுகளாக வறண்டு கிடந்தன. இதனால் ஏரிப்பாசனத்தை நம்பி இருந்த விவசாயிகள் கவலையடைந்தனர். தற்போது கடந்த இரு தினங்களுக்கு முன் பெய்த மழையில், கண்டாச்சிபுரத்தைச் சுற்றியுள்ள அனைத்து ஏரிகளும் நிரம்பி வழிகின்றன. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து விவசாயப் பணிகளை துவக்கியுள்ளனர். மேலும் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந் ததால், கிணற்றுப் பாசன விவசாயிகளும்,பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**மழையால் நீர்வரத்து அதிகரிப்பு நிரம்புகிறது மணிமுக்தா அணை**

ரிஷிவந்தியம்: மணிமுக்தா அணை வேகமாக நிரம்பி வருகிறது. கல்வராயன்மலையில், கடந்த இரண்டு நாட்களாக பெய்த கனமழையால், சங்கராபுரம் மணி மற்றும் முக்தா ஆறுகள் வழியாகவும், கச்சிராயப்பாளையம் கோமுகி அணையில் இருந்து பாப்பாக்கால் ஓடை வழியாகவும், சூளாங்குறிச்சி மணிமுக்தா அணைக்கு, கடந்த 9ம் தேதியிலிருந்து மழை நீர் வரத் துவங்கியது.

இதன் காரணமாக, அணையின் மொத்த உயரமான ௩௬ அடியில், ௩௧ அடி உயரத்துக்கு தண்ணீர் நிரம்பி உள்ளது. அணையின் மொத்த

கொள்ளவு 736.96 மி.கன அடியாகும். நேற்றைய நிலவரப்படி, 406.84 மி. கன அடி தண்ணீர் உள்ளது. வினாடிக்கு, 700 கன அடி நீர், அணைக்கு வந்து கொண்டுள்ளது. அணை வேகமாக நிரம்பி வருவதால், சுற்று வட்டார பகுதியை சேர்ந்த மக்கள் ஆர்வத்துடன் பார்த்து செல்கின்றனர். மேலும், விவசாய கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**நிரம்புகிறது சாத்தனூர் அணை**

திருக்கோவிலூர்: மழை காரணமாக, சாத்தனூர் அணை வேகமாக நிரம்புகிறது.

விழுப்புரம், கடலூர் மாவட்ட விவசாயிகளின் உயிர் நாடியாக உள்ள சாத்தனூர் அணைக்கு, நீர் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால், அணை வேகமாக நிரம்பி வருகிறது. தென்பெண்ணை ஆற்றின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான கர்நாடக மாநில நந்திதுர்கா மலைப்பகுதி மற்றும் கிருஷ்ணகிரி பகுதியில் தொடர்ந்து மழை பெய்வதால், தென்பெண்ணையில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. கெலவரப்பள்ளி அணை நிரம்பி, அங்கிருந்து திறக்கப்படும் தண்ணீர் மூலம், கிருஷ்ணகிரி அணை நிரம்பி வழிகிறது. இந்த உபரி, நீர் முழுவதும் சாத்தனூர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. நேற்று காலை 11:00 மணி நிலவரப்படி, அணைக்கு, விநாடிக்கு 8 ஆயிரத்து 391 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. இதனால், அணையின் நீர்மட்டம் 95.70 அடியை(அணையின் உயரம் கககூ அடி) எட்டியுள்ளது. தற்போது, அணையில், 3 ஆயிரத்து 155 மில்லியன் கன அடி நீர் உள்ளது.

## 3 லட்சம் சாக்குப்பை, 1,000 சவுக்கு கம்புகள்: டெல்டாவில் பொதுப்பணித்துறை தயார்நிலை

மேட்டூர்: டெல்டா மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் ஏரி, குளங்களில் ஏற்படும் உடைப்பை தடுக்க, தளவாடங்களுடன், பொதுப்பணித்துறை அதிகாரிகள் தயார் நிலையில் உள்ளனர். தஞ்சை, திருவாரூர், கடலூர், நாகை மாவட்டங்களில் தீவிரம் அடைந்த வடகிழக்கு பருவமழையால், ஏரிகள், குளங்கள் நிரம்புகின்றன. பலத்தமழையால், ஏரி, குளங்களில் ஏற்படும் உடைப்பை தடுக்க தேவையான தளவாடங்களுடன் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தயார் நிலையில் உள்ளனர்.

இதுகுறித்து பொதுப்பணித்துறை திருச்சி மண்டல தலைமை பொறியாளர் அசோகன் கூறியதாவது: திருச்சி மண்டலத்தில், 2,352 ஏரிகள் உள்ளன. கடந்த சில நாட்களாக பெய்த பருவமழையால், 163 ஏரிகள் நிரம்பி விட்டன. மேலும், 97 ஏரிகளில், 75 சதவீதத்துக்கு மேலும், 200 ஏரிகளில், 50 முதல், 75 சதவீதமும் தண்ணீர் நிரம்பியுள்ளது. இதர, 1,900 ஏரிகளில், 25 சதவீதம் நிரம்பியுள்ளது. டெல்டா மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கால் ஏரி, குளங்களில் உடைப்பு ஏற்படும் பட்சத்தில், பாதிப்பை தடுக்க, 3 லட்சம் சாக்குபைகள், 100 யூனிட் மணல், 1,000 சவுக்கு கம்புகள் என, தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான சாதனங்களுடன் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தயார் நிலையில் உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

கல்லணைக்கு நீர்வரத்து: தலைமை பொறியாளர் அசோகன் கூறுகையில், "மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கான நீர் நிறுத்தப்பட்ட போதிலும், கல்லணைக்கு, 3,000 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. இந்த நீரை கொண்டு, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள ஏரிகளை நிரப்புகிறோம். இதில், 526 ஏரிகள் நிரம்பும் தருவாயில் உள்ளன," என்றார்.

## கோபியில் அதிகபட்ச மழை பதிவு

ஈரோடு: கோபியில் அதிகபட்சமாக மழை பெய்துள்ளது. புயல் காரணமாக ஈரோட்டில் கடந்த இரு தினங்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று காலை எட்டு மணியுடன் கூடிய, 24 மணி நேரத்தில் கோபியில் அதிகபட்சமாக, 40.4 மி.மீ மழையளவு பதிவாகி உள்ளது. இதர இடங்களில் பெய்த மழையளவு விவரம்: பவானி சாகர், 20.4, சத்தியமங்கலம், 17.6, கொடிவேரி, 17, எலந்தகுட்டைமேடு, 29, கவுந்தப்பாடி, 31, பெருந்துறை, 4, பவானி, 15.8, ஓலப்பாளையம், 24, புங்கம்பாடி, 15.8, ஈரோடு, 17, மொடக்குறிச்சி, 16, அரச்சலூர், 18, சென்னிமலை, 16, சிவகிரி, 25, முத்தூர், 20, மங்களப்பட்டி, 15, காங்கேயம், 2, ஒரத்துப்பாளையம் அணை, 4. சீரான மழையால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. இம்மழை நிலத்தடி நீர்மட்டம் உயர்வதற்கு ஏதுவாக அமைந்தது. தீபாவளியன்று இடைவிடாது பெய்த மழையால் நகர்புற பகுதி மக்கள் சிலர் எரிச்சலடைந்தாலும், நிலத்தடி நீருக்கு ஆதாரம் என்பதால் கிராம மக்கள் நிம்மதி அடைந்தனர்.

## சிவகங்கையில் "பனங்கருப்பட்டி' விற்பனை

சிவகங்கை: சிவகங்கையில், இதமான குளிருக்கு சுக்கு காபி பருகும் வாடிக்கையாளர்களுக்கென, பனங்கருப்பட்டி விற்பனை அதிகரித்துள்ளன. தூத்துக்குடி மாவட்டம், உடன்குடியில் பனங்கருப்பட்டி, பனங்கற்கண்டு அதிகம் உற்பத்தியாகிறது. பனை மரங்கள் அதிகம் என்பதால் பதநீரில் இருந்து இங்கு தயாரிக்கும் கருப்பட்டி பல்வேறு பகுதிக்கு செல்கிறது. இஞ்சி, சுக்கு, குறுமிளகு, பிரண்டை சாறு போன்ற முக்கிய பொருட்களுடன் கலந்து, இயற்கை முறையில் தயாரிக்கின்றனர். சளி, இருமல், காய்ச்சலுக்கு உகந்தது. சுக்கு மல்லி டீ, காபியில் கலக்க பனங்கருப்பட்டி வாங்குகின்றனர். கயத்தாறு

வியாபாரிகள் மோகன், ராம்ராஜ் ஆகியோர் சில், சிரட்டை கருப்பட்டி, பனங்கற்கண்டு ஆகியவற்றை மொத்தமாக கொள்முதல் செய்து சிவகங்கையில் விற்பனை செய்கின்றனர். சிரட்டை கருப்பட்டி கிலோ ரூ.120; சில் கருப்பட்டி ரூ.200க்கு விற்கப்படுகிறது. வியாபாரி ராம்ராஜ் கூறுகையில், ""உடன்குடியில் அதிகம் கருப்பட்டி உற்பத்தியாகிறது. கயத்தாறு சந்தையில் இருந்து வாங்கி வருகிறோம். சித்திரை, வைகாசி, ஆனியில் பதநீர் இறக்கலாம். எஞ்சிய பதனீரை கெடாமல் பக்குவப்படுத்தி இருப்பு வைத்து, கருப்பட்டி தயாரிப்பர். வெல்லத்தை விட இனிப்பு அதிகம். சர்க்கரை நோயாளிகள் பயன்படுத்தலாம். பனங்கற்கண்டு பாலில் கலந்து குடித்தால் சளி நீங்கும். இருமல் குறையும், என்றார். கருப்பட்டி ஆர்டருக்கு 74026 - 89195.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பூச்சி, நோய்க் கட்டுப்பாடு: நவம்பர் மாதத்துக்கான முன்னறிவிப்பு**



தமிழ்நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தற்போது நிலவும் பருவநிலை மாற்றம், வட கிழக்கு பருவமழை, பனி மூட்டத்துடன் பெய்து வரும் மழை போன்றவற்றால் பூச்சிகள், நோய்கள் பயிர்களைத் தாக்கி சேதம் விளைவிக்கும் வாய்ப்பு உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பயிர் பாதுகாப்பு இயக்கம் விவசாயிகளுக்கான முன் அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதை விவசாயிகள் அறிந்து கொண்டு தங்களது பயிர்களை பூச்சி, நோய்களில் இருந்து பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நெல்: தமிழகத்தில் இப்போது நிலவும் காலநிலை நெல் பயிரில் இலை சுருட்டுப் புழு, புகையான் பூச்சி தாக்குதலுக்கு சாதகமானதாக உள்ளது.

இலை சுருட்டுப் புழு: தொடர் மழை, பனி மூட்டம் காரணமாக நெல்லில் இலை சுருட்டுப் புழு தாக்குதலுக்கு வாய்ப்பு உள்ளது. இளம் பயிர்கள், தூர் பிடிக்கும் பருவத்தில் உள்ள பயிர்களை தாக்கும் இந்தப் புழுக்கள்

இலைகளை உள்பக்கமாக சுருட்டி உள்ளிருந்து பச்சையத்தை சுரண்டி உண்கின்றன. இதனால் இலைகள் வெள்ளை நிற சுரண்டல்களுடன் காணப்படும். தாக்குதல் அதிகமானால் செடிகள் காய்ந்து விடும்.

இந்த பூச்சியின் தாக்குதல் இருக்கும் சமயம் தழைச்சத்து உரங்களை வயலில் இடுவதை குறைக்க வேண்டும். வயலில் புழுவின் அந்தி பூச்சிகளின் நடமாட்டத்தை அறிந்து விளக்கு பொறி வைத்து கவர்ந்து அழிக்கலாம். தாவர பூச்சிக் கொல்லியான அசாடிரக்டீன் 0.03 சதக் கரைசலை ஏக்கருக்கு 400 மில்லி தெளிக்கலாம். ரசாயன பூச்சிக் கொல்லிகளான கார்ட்ஃப் 50 சதவீத தூளை ஏக்கருக்கு 400 கிராம் (அல்லது) குளோர்பைரிபால் 20 இ.சி. 500 மில்லி உபயோகித்து கட்டுப்படுத்தலாம்.

புகையான்: நெல் வயலில் அதிகமாக நீர் தேங்கி வெளியேற்ற முடியாமல் உள்ள இடங்களில் இந்த பூச்சிகளின் தாக்குதல் அதிகமாக இருக்கும். நெல்லின் தண்டுப் பகுதியில் கூட்டமாக அமர்ந்து சாறு உறிஞ்சும் இந்த பூச்சிகளால் நெற்பயிர் முற்றிலுமாக காய்ந்து விடும். தாக்குதல் அதிகம் உள்ள வயல்களில் எரித்தது போன்ற அறிகுறிகள் ஆங்காங்கே தென்படும்.

தழைச்சத்து உரங்களை 3 அல்லது 4 முறை பிரித்து இட வேண்டும். செயற்கை பைரித்திராய்டு, பூச்சிகளின் மறு உற்பத்தியை தூண்டும் பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்த கூடாது. 3 சத வேப்ப எண்ணெய் கரைசலை ஏக்கருக்கு 6 லிட்டர் என்ற அளவில் சோப்பு கரைசலுடன் கலந்து தெளிக்க வேண்டும். பூச்சிக் கொல்லிகளான டைக்குளோர்வாஸ் 76 எஸ்.சி. ஏக்கருக்கு 200 மில்லி, (அல்லது) ஃபுப்ரோபசின் 25 எஸ்.சி. ஏக்கருக்கு 325 மில்லி (அ) பிப்ரோனில் 5 சதவீதம் எஸ்.சி. ஏக்கருக்கு 400 மில்லி (அ) இமிடாகுளோபிரிட் 17.8 சதவீதம் எஸ்.எல். 40 மில்லியை தெளித்து கட்டுப்படுத்தலாம். நோய் மேலாண்மை: கடலோர மாவட்டங்களில் காற்றழுத்தத் தாழ்வு நிலையால் மேகமூட்டத்துடன்

கூடிய வானிலையும் காற்றில் அதிக ஈரப்பதமும் 3 அல்லது 4 நாள்கள் வரை காணப்பட்டால், நெல் பயிரில் குலை நோய் தென்பட அதிக வாய்ப்புண்டு. விவசாயிகள் உடனடியாக 0.1 சதம் ட்ரைசைக்கிலோசோல் அல்லது கார்பண்டாசிம் 50 சதவீதம் டபிள்யு.பி. 1.5 - 3.0 கிலோ - லிட்டர் அல்லது கார்பண்டாசிம் 12 சதவீதம், மேன்கோசெப் 63 சதவீதம் டபிள்யு.பி. கலந்த மருந்தை 5 கிலோ -லிட்டர் என்ற அளவில் நோய் தாக்கிய பயிர்களில் தெளிக்கவும். தேவைப்பட்டால் 10 நாள்கள் இடைவெளியில் மீண்டும் தெளிக்கவும்.

பாக்டீரியா இலை நோயை கட்டுப்படுத்த கோசைடு 77 சதவீதம் டபிள்யு.பி. என்ற மருந்தை 8.0 கிராம், 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும், தழைச்சத்தை மூன்று முறை பிரித்து இடவும். இலைப் புள்ளி நோயை கட்டுப்படுத்த மான்கோசாப் (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.0 கிராம்) 2 முறை நட்ட 40, 55 நாள்களுக்குப் பின்னர் பயிர்களில் தெளிக்கவும்.

பருத்தி: சாறு உறிஞ்சும் பூச்சிகளான இலைப்பேன் தருமபுரி, விழுப்புரம், தேனி, சேலம் மாவட்டங்களிலும் தென்படுகின்றன. எனவே, இவற்றைக் கண்காணிக்க விவசாயிகள் மஞ்சள் ஒட்டும் பொறி 5 எண்ணிக்கை ஒரு ஏக்கருக்கு வைக்கவும். மேலும், மீன் எண்ணெய் சோப் 1 கிலோவை 40 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு தெளிக்கவும்.

திருநெல்வேலி, தருமபுரி மாவட்டத்தில் பருத்தியில் சிவப்பு காய்ப் புழுவின் தாக்குதல் தென்படுகிறது. எனவே விவசாயிகள் இனக் கவர்ச்சிப் பொறிகளை ஏக்கருக்கு 5 வைத்து அந்திப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கவும், பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும்.

நிலக்கடலை: விழுப்புரம், ஈரோடு, மதுரை, சிவகங்கை, திருநெல்வேலி, ராமநாதபுரம், சேலம் மாவட்டங்களில் இலைச் சுருட்டுப் புழுவின்

தாக்குதல் தென்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த ஹெக்டேருக்கு ஒரு விளக்குப்பொறி வைத்து அந்திப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கவும். மேலும், சிவப்பு கம்பளிப் பூச்சியின் நடமாட்டத்தை கண்காணிக்கவும். தேவைப்பட்டால் வேப்பங்கொட்டை சாறு 5 சதம் நீரில் கலந்து தெளிக்கவும்.

ஈரோடு, ராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களில் இலைப் புள்ளிகளின் தாக்குதல்கள் தென்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த கார்பண்டாசிம் 200 கிராம் (அ) மான்கோசாப் 400 கிராம் (அ) குளோரோதலானில் 400 கிராமை சரியான விகிதத்தில் கலந்து தெளிக்கவும். தேவைப்பட்டால் 15 நாள்கள் கழித்து மறுபடியும் தெளிக்கவும்.

கரும்பு: கோவை, ஈரோடு, தர்மபுரி, நாகப்பட்டினம், சிவகங்கை, விழுப்புரம், சேலம், திருச்சி பகுதிகளில் இடைக் கணுப் புழுத் தாக்குதல் பரவலாகத் தென்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த டிரைக்கோகிராமா கைலோனிஸ் முட்டை ஒட்டுண்ணியை நான்கு மாத பயிரில் தொடங்கி 15 நாள்கள் இடைவெளியில் ஏக்கருக்கு 1 சி.சி. என்றளவில் 6 முறை வெளியிடவும்.

முந்திரி: கடலூர் மாவட்டத்தில் முந்திரியில் கொசு, ஈ தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. கொசு தாக்குதலை கட்டுப்படுத்த புரோமினோபாஸ் (0.05 சதம்) (அ) குளோர் பயிர்பாஸ் (0.05 சதம்) (அ) கார்பாரில் (0.1 சதம்) நீரில் கலந்து தெளிக்கவும்.

**ரசாயன உரத்தின் அளவைக் குறைக்க யோசனை**



நெல் பயிரில் உயிர் உர விதை நேர்த்தி செய்து ரசாயன உரத்தின் அளவை விவசாயிகள் குறைக்கலாம் என, வேளாண் துறை தெரிவித்தது.

நெல் சாகுபடியில் விதை, மண் மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்திடவும், பயிர் வளர்வதற்கான வளி மண்டல தழைச்சத்தைக் கிரகித்து வழங்கவும், உயிரியல் விதை நேர்த்தி, நுண்ணுயிர் விதை நேர்த்தி செய்யலாம். நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறுவதற்கு விதை நேர்த்தி செய்வதால் மண் மூலம் பரவும் நோய்களான குலை நோய், இலைப்புள்ளி நோய், பாக்டீரியா இலைக்கருகல், பழ நோய் ஆகியவற்றை உயிரியல் விதை நோ0த்தி செய்து கட்டுப்படுத்தலாம். காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்தும், பயிர்களுக்கு வழங்குவதாலும், மண்ணில் கிட்டா நிலையில் உள்ள மணிச்சத்தை பயிர்களுக்கு எளிதில் கிடைக்கும் வகையில் மாற்றித்தரும் பாக்டீரியா போன்ற நுண்ணுயிர்களை உரமாக பயன்படுவதால் இவற்றை உயிர் உரம் என்றழைக்கிறோம்.

உயிரி விதை நேர்த்தி: சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் என்ற எதிர் உயிரி பூஞ்சான மருந்தை ஒரு லிட்டர் தண்ணீர் ஒரு கிலோ விதை 10 கிராம் சூடோமோனஸ் என்ற விகிதத்தில் கலந்து உலர வைத்து

பயன்படுத்தலாம். அல்லது டிரைகோடெர்மா விரிடி ஒரு கிலோவுக்கு 4 கிராம் என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்யலாம்.

நுண்ணுயிர் விதை நேர்த்தி: நெல் பயிருக்கு அப்ஸ்ஒஸ்பைரில்லம் (நெல்), பாஸ்போபாக்டீரியா ஆகியவற்றை தலா 3 பாக்கெட் (200 கிராம் அளவு) ஒரு ஹெக்டேருக்கு தேவையான நெல் விதையுடன் ஒரு லிட்டர் ஆறிய கஞ்சியுடன் கலந்து விதைகளை மேலும் கீழும் புரட்டி நுண்ணுயிர்கள் நன்றாக கலக்கும்படி செய்ய வேண்டும். பின்னர் 15-30 நிமிடங்கள் நிழலில் உலர்த்தி 24 மணி நேரத்துக்குள் விதைக்கப் பயன்படுத்த வேண்டும்.

நாற்றினை நனைத்தல்: உயிர் உரங்களை நெல் நாற்றின் வேர்களை நனைத்தும் பயன்படுத்தலாம். தேவையான எண்ணிக்கையில் உயிர் உர பாக்கெட்டுகளை வயலின் ஓரத்தில் கலந்து சிறு குட்டைபோல் நீர் தேக்கி அதில் வேரினை நனைத்து நடவு செய்யலாம். இதனால், வேரில் நுண்ணுயிர்கள் ஒட்டிக்கொண்டு பயிரின் வளர்ச்சிக்கு நன்றாக உதவுகிறது.

நடவு வயலில் நுண்ணுயிர் உரமிடுதல் : ஒரு ஹெக்டேருக்குத் தேவையான 10 பாக்கெட் அப்ஸ்ஒஸ்பைரில்லம் (நெல்) 10 பாக்கெட் பாஸ்போபாக்டீரியா ஆகியவற்றை நன்கு மக்கிய தொழு உரம் 50 கிலோவுடன் கலந்து நடவுக்கு முன்னதாக வயல் முழுவதும் சீராக தூவ வேண்டும்.

இதுகுறித்து புதுக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர் வி.எம்.ரவிச்சந்திரன் கூறியதாவது: நுண்ணுயிர் உரங்களை பயன்படுத்துவதால் நெல் வயலில் நுண்ணுயிர்கள் பெருக்கமடைகின்றன. மண் வளம் அதிகரிக்கிறது. காற்றில் உள்ள தழைச்சத்தினை வேரில் ஈர்த்து வைத்து பயிருக்கு கிடைக்க செய்கிறது.

உரச் செலவு குறைகிறது. பூஞ்சான நோய்களுக்கு எதிர்ப்பு சக்தியும், விதை முளைப்புத் திறனையும் பயிரின் வளர்ச்சியையும் அதிகரிக்கிறது. மண்ணில் கிட்டா நிலையில் உள்ள மணிச்சத்தைக் கரைத்து பயிர்களுக்குக் கிடைக்க செய்கிறது. எனவே, விவசாயிகள் தவறாமல் நடப்பு சம்பா நெல் சாகுபடியில் உயிரி உர விதை நேர்த்தி செய்து உரச் செலவைக் குறைத்து, அதிக மகசூல் பெற முடியும் என்றார்.

**விலையில்லா ஆடுகள் பெற்ற பயனாளிகள் முதல்வருக்கு நன்றி**

திருப்பூர் மாவட்டத்தில், தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஆடுகள் பெற்ற பயனாளிகள் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கு.கோவிந்தராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. இதன் ஒருபகுதியாக கால்நடைத் துறை சார்பில், விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் திருப்பூர் மாவட்டத்தில் இதுவரை 235 ஊராட்சிகளைச் சேர்ந்த 17,112 பயனாளிகளுக்கு ரூ. 22.147 கோடி மதிப்பில் 68,448 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் பயனடைந்த, ஏழை, எளியோர், ஆதிதிராவிடர்கள், விதவைகள், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் உள்ளிட்டோர் முதல்வருக்கு நன்றி தெரிவித்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மழையால் காய்கறி விலை கடும் உயர்வு**

வேலூர் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, காய்கறிகளின் விலை இரு மடங்காக அதிகரித்துள்ளதால் மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

தமிழகம் மட்டுமல்லாது கர்நாடகம், ஆந்திரத்தில் இருந்து வேலூருக்கு தினந்தோறும் அதிக அளவில் காய்கறிகள், பழங்கள் விற்பனைக்குக் கொண்டு வரப்படுகின்றன. இந்த நிலையில், கடந்த 4 நாள்களாகப் பெய்து வரும் தொடர் மழை காரணமாக நேதாஜி மார்க்கெட்டுக்கு காய்கறிகள் வரத்து வெகுவாக குறைந்துள்ளது.

இதனால் கிலோ ரூ.15-க்கு விற்ற பீன்ஸ் ரூ. 30, ரூ. 20-க்கு விற்பனையான கேரட் ரூ. 40, ரூ. 12-க்கு விற்ற வெண்டைக்காய் ரூ. 20, ரூ. 10-க்கு விற்கப்பட்ட பச்சை மிளகாய் ரூ. 20, கத்தரிக்காய் ரூ. 25-க்கும், பூண்டு ரூ. 120- என விற்பனை செய்யப்பட்டன.

**அரக்கோணத்தில் அனைத்து ஏரிகளும் நிரம்பின**

அரக்கோணம் வட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளும் 90 சதவீதம் நிரம்பிய நிலையில் உள்ளன.

அரக்கோணம் நகரில் கடந்த மூன்று தினங்களாக பலத்த மழை பெய்த வண்ணம் இருந்தது. இதனால் அரக்கோணம் வட்டத்தில் உள்ள பெரும்பாலான ஏரிகள் நிரம்பின. அரக்கோணம் ஏரி, காவனூர் ஏரி இரு ஏரிகளும் நிரம்பிய சூழ்நிலையில் ஏரி பகுதியில் ஆக்கிரமித்து வீடுகளை கட்டியிருப்போர் ஆள்களுடன் சென்று தாங்களாகவே மதகுகளைத் திறந்து விட்டதால் தண்ணீர் வெளியேறின. இதனால், ஏரிப் பகுதியில் வீடுகளில் தண்ணீர் செல்வது நிறுத்தப்பட்டது.

அரக்கோணத்தை அடுத்த ஆவதம் ஏரியில் தண்ணீர் நிரம்பிய நிலையில் சில இடங்களில் கரைகளில் அரிப்பு ஏற்பட்டதால் பொதுப்பணித் துறையின் ஏரிகள் கோட்ட பிரிவினர் அங்கு சென்று கரைகளில் மணல் மூட்டைகளை அடுக்கினர். இதனால் மூன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் ஏற்பட்ட கரைஅரிப்பு தடுக்கப்பட்டது. இப்பகுதியை ராணிப்பேட்டை கோட்டாட்சியர் முருகேசன், அரக்கோணம் வட்டாட்சியர் பானுமதி உள்ளிட்ட அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை நேரில் சென்று பார்வையிட்டனர். அரக்கோணம் ரயில் நிலைய அனுகுசாலையில் இருந்த பெரியமரம் மழையால் சாலையில் விழுந்தது. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. சம்பவ இடத்தை அரக்கோணம் எம்.எல்.ஏ சு.ரவி பார்வையிட்டார். பிறகு மரம் அகற்றப்பட்டது.

அரக்கோணம் நகரில் காலிவாரிகண்டிகை பகுதி குறிஞ்சிநகரில் மழைநீர் கழிவுநீரோடு கலந்து வீடுகளுக்குள் புகுந்தது. அவற்றை சீராக்கும் பணிக்கு வந்த நகராட்சிலாரியை அப்பகுதி மக்கள் சிறிது நேரம் சிறைப் பிடித்தனர்.

**பயிர் பாதிப்பைக் கணக்கிட்டு உடனே நிவாரணம்: அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவு**

திருவண்ணாமலை மாவட்டத்தில், பயிர் பாதிப்புகளை கணக்கிட்டு, விவசாயிகளுக்கு உடனே வெள்ள நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேளாண் துறை அதிகாரிகளுக்கு அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் உத்தரவிட்டார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் வடகிழக்குப் பருவ மழையால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம், ஆட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகித்தார்.

மாவட்ட கண்காணிப்பு அலுவலரும், ஐஏஎஸ் அதிகாரியுமான பிரதீப் யாதவ் முன்னிலை வகித்தார். தமிழக தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன், மாவட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார்.

அப்போது அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் பேசுகையில், திருவண்ணாமலை மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழையின் தொடக்கக் காலமான 2015 அக்டோபர் 1 முதல் நவம்பர் 10 வரை 4 பேர் இறந்துள்ளனர். இவர்களில் மூவருக்கு தலா ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் வீதம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல, 17 மாடுகள், 12 ஆடுகள் இறந்துள்ளன. இறந்த மாடு ஒன்றுக்கு ரூ.30 ஆயிரம் வீதமும், ஆடு ஒன்றுக்கு ரூ.3 ஆயிரம் வீதமும் நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் மொத்தம் 12 முழு குடிசை வீடுகள், 77 பகுதி குடிசை வீடுகள் என மொத்தம் 89 வீடுகள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு ரூ.3 லட்சத்து 75 ஆயிரத்து 700 நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டம் முழுவதும் சாலைகளில் விழுந்த 45 மரங்கள் வருவாய்த் துறை, நெடுஞ்சாலைத் துறை, தீயணைப்புத் துறையால் அகற்றப்பட்டுள்ளன.

49 மின் கம்பங்கள் அகற்றப்பட்டு, புதிய மின் கம்பங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

அரசு அலுவலர்களுடன் நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகளும் இணைந்து வடகிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த 15 ஆண்டுகளாக இந்த அளவுக்கு மழை பெய்யவில்லை. எனவே, வேளாண் துறையினர்

அனைத்து வட்டங்களிலும் பயிர் பாதிப்புகளைக் கணக்கிட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனே வெள்ள நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். செய்யாறு, ஆரணி, வந்தவாசி பகுதிகளில் டெங்கு, மர்மக் காய்ச்சல் பரவாமல் சுகாதாரத் துறை துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுப்பணித்துறையினர் பழைய பள்ளிக் கட்டடங்களை கண்டறிந்து, அந்தப் பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவியரை பாதுகாப்பான இடங்களில் வைத்து பாடம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். மழையால் பழுதடைந்துள்ள மின் கம்பங்கள், மின் மாற்றிகளை மின்வாரியம் உடனே சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். கூட்டத்தில், கீழ்பென்னாத்தூர் எம்எல்ஏ ஏ.கே.அரங்கநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் சா.பழனி, கோட்டாட்சியர் உமா மகேஸ்வரி, வருவாய்த் துறை, நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சித் துறை, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, மின்வாரியம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**சம்பா சாகுபடிக்கு பயனளிக்கும் மழை**

தற்போது பெய்து வரும் தொடர் மழை சம்பா சாகுபடிக்கு பயன் அளிக்கும் என்று விவசாயிகள் தெரிவித்தனர். இதனிடையே, இந்த மழையை கருத்தில்கொண்டு, பாசன வாய்க்கால்களில் தண்ணீர் திறப்பு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதலே திருச்சி மாநகர் மற்றும் மாவட்டப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. விடிய விடிய பெய்த மழை திங்கள்கிழமையும் தொடர்ந்தது. பிற்பகலில் சிறிது நேரம் நின்றிருந்த மழை இரவு வரை தொடர்ந்து நீடித்தது.

இதனால் மாநகர் மற்றும் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பொதுமக்களின் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டது. பல சாலைகளில் மழைநீர் தேங்கிக் காணப்பட்டதுடன் பல இடங்களில் சாலைகளில்

ஆங்காங்கே பள்ளமும் ஏற்பட்டதால் வாகன ஓட்டிகள் அவதிக்குள்ளாகினர்.

சம்பா சாகுபடிக்கு பெரும் பலன் அளிக்கும்: சம்பா சாகுபடி மேற்கொண்டு வரும் விவசாயிகளுக்கு சரியான நேரத்தில் பயன் அளிக்கும் வகையில் மழை பெய்து வருகிறது. இந்த மழையின் காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்துவருவதால், சாகுபடி நேரத்தில் தண்ணீர் பெறுவதில் எவ்வித சிக்கலும் இருக்காது. மாயனூர் பகுதியில் கட்டப்பட்டுள்ள கதவணை மூலம் 1 டிஎம்சி தண்ணீர் சேமிக்கப்பட்டுள்ளது. இது பாசன நேரத்துக்கு பெரும் பயன் அளிக்கும். இதுபோல, காவிரி, கொள்ளிடம் ஆற்றின் பல இடங்களில் கதவணைகளை கட்டினால் பெரும் பயனுள்ளதாக இருக்கும் என்றார் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டச் செயலர் அயிலை சிவசூரியன்.

பாசன வாய்க்கால்களில் தண்ணீர் திறப்பு நிறுத்தம்: பாசனத்துக்காக மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு 500 கன அடியாக உள்ளதாலும், தொடர்ந்து பெய்து வரும் மழையின் காரணமாகவும் விவசாயிகளின் பயன்பாட்டுக்காக உய்யக்கொண்டான் மற்றும் அய்யன் வாய்க்கால் உள்ளிட்ட 7 பாசன வாய்க்கால்களிலிருந்து தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டுள்ளதாக பொதுப்பணித்துறை உதவி நிர்வாகப் பொறியாளர் (நீர்வள ஆதாரம்) இளங்கோவன் தெரிவித்தார்.

அதே நேரத்தில் பாசன வாய்க்கால்களுக்கு வரும் மழைநீரின் அளவை கண்காணித்து வருகிறோம். அதிகளவில் தண்ணீர் வரத்து இருந்தால் பாதிப்பு ஏற்படாத வகையில் பெரும் வாய்க்கால் மற்றும் இதர வாய்க்கால்களில் திறந்துவிடுவதற்கான பணியை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

**பயிர்க் காப்பீடு செய்ய டிச. 15 கடைசி நாள்**

புதுகை மாவட்டத்தில் நடப்பு சம்பா நெல் பயிருக்கு காப்பீடு செய்ய விரும்பும் விவசாயிகள் டிச.15 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்(பொறுப்பு) எஸ். பால்வடிவு வெளியிட்ட செய்திக்குறிப்பு: புதுகை மாவட்ட தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் நடப்பு சம்பா நெல் பயிருக்கு கடன் பெறாத விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்ய 15.12.2015 ஆம் தேதி இறுதி நாளாகும். தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் கடன் பெறும் விவசாயிகளுக்கு கட்டாயத்தின் பேரிலும், பயிர்க்கடன் பெறாத விவசாயிகளுக்கு விருப்பத்தின் பேரிலும் பயிர்க்காப்பீடு செய்யப்படுகிறது.

நடப்பாண்டு சம்பா நெல் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு சாதாரண காப்பீடுத் தொகையாக ரூ.14,904 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடன் பெறாத விவசாயிகள் சம்பா நெல் பயிர் ஒரு ஏக்கருக்கு ரூ.135-ம், கடன் பெற்ற விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ரூ.149ம் பிரிமியம் செலுத்த வேண்டும்.

நெல் பயிருக்கு கூடுதல் காப்பீடுத் தொகையாக ஒரு ஏக்கருக்கு ரூ.13,040 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கூடுதல் காப்பீடு பிரிமியமாக விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ரூ.3 ஆயிரம் செலுத்தி கூடுதல் காப்பீடு செய்யலாம்.

எனவே மாவட்ட விவசாயிகள் காப்பீடு செய்வதற்கான இறுதி தேதி வரை காத்திருக்காமல் பயிரிட்டதற்கான தக்க(கிராம நிர்வாக அலுவலர் சான்று) ஆதாரத்துடன் தங்களது பகுதியிலுள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களை வரும் 15.12.2015 -ஆம் தேதிக்குள் பயிர்க்காப்பீடு செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பருவ மழை: திண்டிவனம் பகுதியில் சம்பா சாகுபடி தொடக்கம்**

திண்டிவனம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதால் சுமார் 25 ஆயிரம் ஏக்கரில் சம்பா சாகுபடி பணிகள் தொடங்கியுள்ளன. திண்டிவனம் மற்றும் மரக்காணம் பகுதிகளில் கடந்த சில நாள்களாக வடகிழக்கு பருவ மழையின் தாக்கம் ஆதிகமாகவே இருந்தது. ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி மரக்காணத்தில் 100 மில்லி மீட்டரும், திண்டிவனத்தில் 65 மி.மீட்டரும் மழை பதிவானது.

திண்டிவனம் மற்றும் மரக்காணம் பகுதிகளில் 10,412 திறந்த வெளிக்கிணறுகள் மற்றும் 150 ஏரிகள் நீர்ப்பாசனத்துக்கு பயன்பட்டு வருகிறது. இம்மழையினால் திறந்த வெளிக் கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. மேலும், ஏரிகளுக்கும் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதுகுறித்து வேளாண் உதவி இயக்குநர் கென்னடிஜெபக்குமார் கூறுகையில், விவசாயிகளுக்குத் தேவையான ஆடுதுறை 39 ரகம் நெல் விதைகள் போதிய அளவு விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு நிறுவனங்களில்

காம்ப்ளக்ஸ் மற்றும் யூரியா இருப்பு உள்ளது.

விவசாயிகள் நடப்பு சம்பா பருவத்தில் அதிக அளவில் இயந்திர நடவு செய்து மகசூலினை அதிகரித்திடலாம். இதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் வேளாண் துறை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

**மழைச்சேத விவரங்களை உடனே வழங்க வேண்டும்: அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவு**

மாவட்டத்தில் மழை சேத விவரங்களை உடனே கணக்கிட்டு வழங்க வேண்டும் என்று அனைத்துத் துறையினருக்கு அமைச்சர் மோகன் உத்தரவிட்டுள்ளார்.

மாவட்ட ஆட்சியரகத்தில், வடகிழக்கு பருவமழை சேதங்கள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடன் ஊரக தொழில்துறை அமைச்சர் ப.மோகன் புதன்கிழமை மாலை ஆலோசனை நடத்தினார்.

இதற்கான கூட்டத்தில் ஆட்சியர் எம்.லட்சுமி தலைமை வகித்தார். அமைச்சர் மோகன் பேசியது: மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையால் ஏற்பட்ட சேத விவரங்களை அந்தந்தத் துறை அலுவலர்கள் உடனடியாக கணக்கீடு செய்து புள்ளி விவரங்களை வழங்க வேண்டும்.

கால்நடை இறப்பு தொடர்பாக, கால்நடை மருத்துவர்கள் இறப்புச் சான்றிதழ்களை உடனே வழங்க வேண்டும். நெற்பயிர்கள், உளுந்து, மக்காச்சோளம், வாழை, மரவள்ளி சேதங்களை வேளாண் துறையினர் கிராமங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து, பயிர்ச்சேத விவரங்களை அளிக்க வேண்டும். பொதுப்பணித் துறையினர் அனைத்து ஏரி, குளங்களைப் பார்வையிட்டு கரைகள் பலமாக உள்ளதா என்பதை உறுதிசெய்ய வேண்டும். தென்பெண்ணை ஆற்றில் திறந்துவிடப்பட்டுள்ள நீரை ஆற்றங்கரையை ஒட்டியுள்ள 98 ஏரிகளில் நிரப்ப வேண்டும். பரிக்கல், மாரனோடை, சேந்தநாடு பகுதி ஏரி உடைப்புகளை சீரமைத்து நீர்பிடிப்பை மேற்கொள்ள போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டும். நோய் பாதிப்பைத் தவிர்க்க சுகாதாரத் துறையினர் மருந்து, மாத்திரைகளை இருப்பில் வைத்திருக்க வேண்டும், மருத்துவர்கள் 24 மணி நேரமும் பணியில் இருக்க வேண்டும்.

மழை பாதிப்பில் இறந்தவருக்கு ரூ.4 லட்சமும், பகுதி சேதமடைந்த வீடுகளுக்கு ரூ.4,100ம், முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்கு ரூ.5 ஆயிரமும், மாடு உயிரிழப்பிற்கு ரூ.30 ஆயிரமும், கோழிக்கு ரூ.100ம் வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். அரசுத் துறையினர் மழை பாதிப்பை கணக்கிட்டு, மாவட்ட நிர்வாகத்துக்கு உடனடியாக புள்ளி விவரங்களை வழங்க வேண்டும் என்றார். எம்பிக்கள், இரா.லட்சுமணன்,

ராஜேந்திரன், காமராஜ், வெ.ஏழுமலை, எம்எல்ஏக்கள் சிவி.சண்முகம், இரா.குமரகுரு, அழகுவேல்பாபு, அரிதாஸ், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கோ.ராதா மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**நிரம்பியது எல்லீஸ் சத்திரம் தடுப்பணை**

விழுப்புரம் அருகே தென்பெண்ணை ஆற்றில் நீண்ட காலத்திற்குப் பின்னர் நீர்வரத்து அதிகரித்ததால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழை தொடங்கி பரவலாக பெய்து வருகிறது. இதில், புயல் சின்னம் காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தொடங்கி இரண்டு நாள்கள் பெய்த கன மழையால், மழை நீர் கரைபுரண்டு வாய்க்கால்களில் நீர் வழிந்தோடி ஏரி, குளங்கள் நிரம்பி வருகின்றன. தற்போது பெய்த கனமழையின் காரமாக கடந்த 5 ஆண்டுகளாக வறண்டு கிடந்த தென்பெண்ணை ஆற்றில், நீர்வரத்து தொடங்கியுள்ளது. திருக்கோவிலூர் பகுதியில் பெய்த மழையினால், சுற்றுப் பகுதியிலிருந்து 6 ஆயிரம் கனஅடி அளவில் தண்ணீர் வரத்து ஏற்பட்டுள்ளது. இதனால், அங்குள்ள அணைக்கட்டிலிருந்து ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, தென்பெண்ணை ஆற்றில் விழுப்புரம் அருகே உள்ள எல்லீஸ் சத்திரம் அணைக்கட்டு தடுப்பணை வழியாக தண்ணீர் நிரம்பி வெளியேறுகிறது. தற்போது, தடுப்பணை மூடப்பட்டு, மரகதபுரம், கண்டம்பாக்கம், ஆழாங்கால் வாய்க்கால்கள் வழியாக தண்ணீர் திருப்பிவிடப்பட்டுள்ளது.

இதனால், விழுப்புரம் அருகே உள்ள மரகதபுரம், கண்டம்பாக்கம், கண்டமானடி, கொளத்தூர் உள்ளிட்ட சுற்றுப் பகுதி கிராமங்களைச் சேர்ந்த ஏரிகளுக்கு தண்ணீர் பிடிக்கும் பணியை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர்.

மேலும், எல்லீஸ் சத்திரம் தடுப்பணையிலிருந்து வெளியேறும் உபரி நீர் தென்பெண்ணை ஆற்றில் பிடாகம், அத்தியூர்திருவாதி கிராமங்கள் வழியாக கரையோரமாக வழிந்தோடி வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளுக்குப் பின்னர், தென்பெண்ணை ஆற்றில் தண்ணீரைப் பார்க்கும் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**புழல் ஏரிக்கு நீர் வரத்து அதிகரிப்பு ஏரியில் மின்மோட்டார்கள் அகற்றும் பணி தீவிரம்**



சென்னை,

வடகிழக்கு பருவமழை எதிரொலி காரணமாக புழல் ஏரிக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. வினாடிக்கு 779 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது.

வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்து வரும் வடகிழக்கு பருவமழை காரணமாக சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஏரிகளான செம்பரம்பாக்கம், பூண்டி, சோழவரம், புழல் ஆகிய ஏரிகளில் நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. சென்னையை அடுத்த புழல் ஏரியில் வினாடிக்கு 779 க.அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. மின்மோட்டார்கள் அகற்றம் ஏரியின் நீர் மட்டம் வெகுவாக குறைந்தபோது தண்ணீர் எடுப்பதற்காக ஏரியின் உள்பகுதியில் (ஜோன்ஸ் டவர்-1881) 11 மின்மோட்டார்கள் அமைக் கப்பட்டு சென்னைக்கு குடிநீர் வினியோகிக்கப்பட்டு வந்தது.

தற்போது நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக மின்மோட்டார்கள் நீரில் மூழ்கும்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே 11 மின் மோட்டார்களையும் அகற்றும் பணியில் குடிநீர் வாரியம் தீவிரமாக ஈடுபட்டு வந்தது.இதேபோன்று பூண்டி, சோழவரம், செம்பரம்பாக்கம் போன்ற ஏரிகளிலும் நீர்வரத்து அதிகரித்து வருகிறது. செம்பரம்பாக்கம் ஏரி நீர்மட்டம் உயருகிறது தொடர் மழையால் சென்னைக்கு குடிநீர் வழங்கும் செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் மட்டமும் வேகமாக உயர்ந்து வருகிறது. இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

செம்பரம்பாக்கம் ஏரியின் மொத்த கொள்ளளவு 3,645 மில்லியன் கன அடி ஆகும். மழைக்கு முன்பு 276 மில்லியன் கன அடி தண்ணீர் இருந்தது, மழைக்கு பின்பு 885 மில்லியன் கன அடியாக நீர் உள்ளது. மழைக்கு முன்பு நீர்மட்டம் 5.76அடி இருந்தது. தற்போது 11 அடியாக உள்ளது.

நேற்று முன்தினம் ஏரிக்கு வினாடிக்கு 3,339 கன அடி நீர் வந்தது. அது நேற்று முதல் 1,159 கன அடியாக வருகிறது. செம்பரம்பாக்கம் ஏரிக்கு நீர் வரத்து ஆதாரமாக விளங்கும் கிருஷ்ணா நதி நீர் கால்வாய், ஸ்ரீபெரும்தூர் ஏரியிலிருந்து வரும் சவுத்ரி கால்வாய்,

நேமம் ஏரியிலிருந்து வரக்கூடிய பங்காரு கால்வாய் என அனைத்து நீர் வரத்து கால்வாய்களும் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக தூர் வாரி சுத்தம் செய்யப்பட்டதால், மழைநீர் அனைத்தும் சீராக ஏரிக்கு வந்து கொண்டிருக்கிறது இன்னும் சில தினங்கள் தொடர்ந்து மழை பெய்தால் செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் மட்டம் வேகமாக உயரும்' இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**நொய்யல் ஆற்றில் தண்ணீர் திறப்பு: தொடர் மழையால் 10 குளங்கள் நிரம்பின**



கோவை

கோவையில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் நொய்யல் ஆற்றில் இருந்து தண்ணீர் திறக்கப் பட்டுள்ளது. இதன் காரணமாக 10 குளங்கள் நிரம்பின. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். கோவையில் மழை : தமிழகத்தில் பருவமழை தீவிரம் அடைந்ததை தொடர்ந்து பல்வேறு இடங்களில் மழை பெய்து வரு கிறது. அதுபோல் கோவை மாவட்டத்திலும் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில் நேற்று காலையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. காலை 10.30 மணிக்கு பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக கோவையில் உள்ள முக்கிய சாலைகளின் இருபுறங்களிலும் மழைநீர் ஆறாக ஓடியது. அதோடு தாழ்வான பகுதிகளில் மழைநீர் குளம்போன்று தேங்கி நிற்கிறது. மேலும் மழைநீர் குண்டும், குழியுமான ரோடுகளில் தேங்கி சேறும், சகதியுமாக காட்சி அளிக்கிறது. இதனால் வாகன ஓட்டுனர்கள் மற்றும் பொதுமக்கள் மிகவும் சிரமத்துக்கு ஆளாகின்றனர்.

குளங்களுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

மழை காரணமாக எப்போதும் பரபரப்பாக காணப்படும் கோவை காந்திபுரம் கிராஸ்கட் ரோடு, 100 அடி ரோடு, டவுன்ஹால், ஒப்பணக்கார வீதிகளில் மக்கள் நடமாட்டம் மிகவும் குறைவாக இருந்தது. தொடர் மழையால் கோவை நொய்யல் ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. நொய்யல் ஆற்றை நம்பி கோவை மாவட்டத்தில் 31 குளங்கள் உள்ளன. இந்த குளங்களுக்கு நொய்யல் ஆற்றில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளதால், குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் அந்த குளங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன. இது குறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது:-

10 குளங்கள் நிரம்பின

கோவையில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக அனைத்து குளங்களுக்கும் நீர்வரத்து அதிக ரித்து உள்ளது. இதனால் மாவட்டத்தில் உள்ள புதுக்குளம், வேடப்பட்டிகுளம், நரசாம்பதி குளம், செல்வசிந்தாமணி குளம், கிருஷ்ணாம்பதி குளம், குமாரசாமி குளம், உக்கடம் பெரியகுளம், வாலாங்குளம் உள்பட 10 குளங்கள் நிரம்பி வழிகின்றன.

அதுபோன்று பேரூர்குளம், குனியமுத்தூர் குளம், சிங்காநல்லூர் குளம், ஒட்டர்பாளையம் குளம், கண்ணம்பாளையம் குளம் உள்பட 15-க்கும் மேற்பட்ட குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் அந்த

குளங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன. மீதமுள்ள குளங்களுக்கு குறைந்த அளவே தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. நிரம்ப வாய்ப்பு : மேலும் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் நிலம் மற்றும் அரசு நிலங்களில் அமைக்கப்பட்ட பண் ணை குட்டைகளில் 1200 பண்ணை குட்டைகள் நிரம்பி உள்ளன. ஒருசில பண்ணை குட்டைகள் நிரம்பும் நிலையில் உள்ளன. தற்போது பெய்வது போல் ஒரு வாரத்துக்கு மழை பெய்தால், மாவட்டத்தில் உள்ள 31 குளங்களும், 1500 பண்ணைக்குட்டைகளும் நிரம்பி விடும். இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர். விவசாயிகள் மகிழ்ச்சி : கோவை மாநகரம் மற்றும் மாவட்ட பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர குளங்கள் மற்றும் குட்டை களே முக்கிய ஆதாரமாக உள்ளது. மழை காரணமாக குளங்கள்-குட்டைகள் நிரம்புவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**வரட்டுப்பள்ளம் அணை நீர்மட்டம் ஒரே நாளில் 5 அடி உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**



அந்தியூர்

அந்தியூர் வரட்டுப்பள்ளம் அணை மேற்கு மலைத்தொடர்ச்சி மலைகளுக்கு இடையே உள்ளது. கடந்த 2 நாட்களாக வரட்டுப்பள்ளம் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான தாளக்கரை, தட்டகரை, போலி ஆகிய பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இதனால் ஒரேநாளில் அணையின் நீர்மட்டம் 5 அடி உயர்ந்துள்ளது. அணையின் மொத்த கொள்ளளவு 33.33 அடியாகும்.

தற்போது 33 அடிக்கு தண்ணீர் உள்ளது. அதன் முழு கொள்ளளவும் எட்டி விரைவில் அணை நிரம்பி விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. வரட்டுப்பள்ளம் அணை நிரம்பியவுடன் அதன் உபரிநீர் கெட்டிசமுத்திர ஏரிக்கு வரும். அந்தியூர் பகுதியில் உள்ள 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாய நிலங்கள் பயன்பெறும்.

இதனால் அந்தியூர் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**அரும்பாவூர் பகுதியில் மழையால் பாதித்த பயிர்களுக்கு நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை**



பெரம்பலூர் மாவட்டம், அரும்பாவூர் பகுதியில் பலத்த மழை மற்றும் சூறைக்காற்றால் பாதித்த பயிர்களுக்கு நிவாரணம் வழங்க அரசுக்கு

விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். தற்போது தமிழகம் எங்கும் வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. இந்நிலையில் அரும்பாவூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மலையாளப்பட்டி, விஜயபுரம், தொண்டமாந்துறை, தழுதாழை, வெங்கனூர், உடும்பியம், பெரியம்மாபாளையம், பூலாம்பாடி, கடம்பூர் கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த பாக்கு மரங்கள், வாழை மரங்கள், மக்காச்சோளம், கரும்பு போன்ற பயிர்கள் புயலால் வீசப்பட்ட காற்றினால் சேதம் அடைந்தன.ஆகவே, சேதமதிப்பினை கணக்கிட்டு இப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டுமென அரசுக்கு அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கால்நடைகளுக்கு ஊட்டசத்து அளிக்கும் பயிற்சி வேளாண் கல்லூரி மாணவிகள் பங்கேற்பு**



உத்தமபாளையம்

தேனி மாவட்டம் உத்தமபாளையம் அருகே உள்ள உ.அம்மாபட்டியில் கால்நடைகளுக்கு ஊட்டச்சத்து அளிக்கும் பயிற்சி நடைபெற்றது. இதில் குள்ளப்புரம் அரசு வேளாண் கல்லூரி மாணவிகள் கலந்துகொண்டு பயிற்சி அளித்தனர். அவர்கள் கால்நடைகளுக்கு ஊட்டச்சத்து எத்தனை முக்கியமானது என்றும், அதனை தாதுஉப்பு கலவை மூலம் எளிதில்

அவற்றுக்கு வழங்க முடியும் என்றும் அவற்றை வளர்ப்பவர்களிடம் கூறினர்.

அத்துடன் இந்த தாது உப்பு கலவையை கன்றுகளுக்கு 5 கிராம் அளவிலும், கறவை மாடுகள், சினையுற்ற பசுக்கள் மற்றும் காளை மாடுகளுக்கு 30 முதல் 40 கிராம் வரையிலும் கொடுக்கவேண்டும் என்றும் கூறினர். இதையடுத்து அந்த பகுதியில் உள்ள மாடுகளுக்கு ஊட்டச்சத்து உணவுகளையும் மாணவிகள் கொடுத்தனர்.

தினகரன்

**காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை : மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



மேட்டூர்: தமிழகத்தில் பருவமழை தீவிரமடைந்துள்ளதையடுத்து மாநிலத்தின் பல்வேறு இடங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை தீவிரம் அடைந்துள்ளதால்

பாலாற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. காவிரி நதியுடன் பாலாறு இணைவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.இதனால் மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு வினாடிக்கு 500 கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வருவதால் அணையின் நீர்மட்டம் கடந்த சில நாட்களாக உயர்ந்து வருகிறது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 79.10 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 16 ஆயிரத்து 496 கன அடி நீர் வந்தது.

இன்று காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 80.87 அடியாக உயர்ந்தது. தொடர்ந்து நீர் வரத்து அதிகரித்துள்ளதால் நீர்மட்டம் 81 அடியை எட்டியது. அணைக்கு வினாடிக்கு 20951 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. தற்போதைய உள்ள நிலவரப்படி இந்த ஆண்டு டெல்டா மற்றும் கால்வாய் பாசனத்திற்கு மேட்டூர் அணையில் இருந்து முழுமையாக தண்ணீர் அளிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**குறைவில்லா சத்துகளை வழங்கும் கொய்யா!**




இயற்கை ஒவ்வொன்றையும் மிகச் சரியாகவே இயக்குகிறது. அதைப் புரிந்துகொள்ள முடியாத மனிதன், இயற்கைக்கு நேர் எதிராக இயங்க

ஆரம்பிக்கும் போதுதான் பிரச்னை ஆரம்பமாகிறது. இது, நம் உடலுக்கும் பொருந்தும். ஒவ்வொரு பகுதியிலும், அந்தந்த தட்பவெப்பச் சூழலுக்கு ஏற்ப, மனிதனுக்குத் தேவையான உணவுகளை இயற்கை படைத்திருக்கிறது. உதாரணத்துக்கு, வெயில் காலத்தில் பதநீர், நுங்கு.

'உள்ளூர் மாடு விலை போகாது' என்பார்கள். அதுபோல, விலை குறைவாக உள்ள நம் ஊர் பழங்களை நாம் அதிகம் விரும்பி உண்பது இல்லை. இன்றைக்கு ஆப்பிள், ஆரஞ்சு, கிவி, பட்டர் ஃப்ரூட், மங்குஸ்தான், ரங்குட்டான் போன்ற வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் விதவிதமான பழங்களை, அதிக விலை கொடுத்து வாங்கி உண்கிறோம். இந்தப் பழங்களுக்கு எந்த வகையிலும் குறையாத சத்துக்கள் கொய்யா, பப்பாளி, சப்போட்டா பழங்களில் இருக்கின்றன.

இது கொய்யாப் பழ சீஸன். 'கொய்யாவைக் கடித்துத் தின்னா... பலன் அதிகம் பையா!' எனச் சொல்லிவைத்தனர் நம் முன்னோர். 'ஏழைகளின் ஆப்பிள்' எனச் சொல்லப்படும் கொய்யாவில் உள்ள சத்துக்கள் பற்றி, திண்டுக்கல்லைச் சேர்ந்த இயற்கை மற்றும் யோகா மருத்துவரான சர்மிளா பாலகுரு விளக்கமாகச் சொல்கிறார். 'உள்ளூரில் விளையும் பழங்களைச் சாப்பிடுவது கௌரவக் குறைச்சல் என்று நினைத்து ஒதுக்கிவிடுகிறோம்.

உண்மையில், அனைத்துவிதமான சமச்சீர் சத்துக்களும் நம் ஊர் பழங்களில் உள்ளன. சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்தம், ரத்தத்தில் கொழுப்பு அளவு அதிகரிப்பு ஆகிய இந்த மூன்றும்தான் இன்றைக்கு இருக்கிற மிக முக்கியமான பிரச்னைகள். இந்த மூன்றுக்குமான அருமருந்து, கொய்யாப் பழம்தான். சர்க்கரை நோயாளிகள் கொய்யாவைச் சாப்பிடக் கூடாது என்பார்கள். இது தவறான கருத்து.

கனிந்த பழமாகச் சாப்பிடாமல், அரைப் பழமாகச் சாப்பிடலாம்.

தொடர்ந்து சாப்பிட்டுவந்தால், சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் கொய்யாவுக்கு உண்டு. உயர் ரத்த அழுத்தம், இதயப் படபடப்பு ஆகியவற்றைக் குறைக்கும். இன்றைக்கு இந்தியப் பெண்கள், குழந்தைகள் மத்தியில் ரத்த சோகை பெருமளவில் உள்ளது. ரத்த சோகையைப் போக்கும் சக்தி, கொய்யாவில் உள்ளது. கண்ட உணவைச் சாப்பிட்டு, வயிற்றைக்கெடுத்து வைத்திருக்கிறோம். இதனால் ஏற்படும் செரிமானக் குறைபாட்டைப் போக்க, கொய்யாப் பழம் சாப்பிடலாம்.

ஆரஞ்சுப் பழத்தில் வைட்டமின் சி அதிகமாக உள்ளது என்பார்கள். ஆனால், அதைவிட மூன்று மடங்கு அதிகமாக கொய்யாவில், வைட்டமின் சி இருக்கிறது. இதேபோல, கால்சியம் உள்ளிட்ட தாதுப் பொருட்களும் மிக அதிக அளவு உள்ளன. இதனால், குழந்தைகள் தினமும் கொய்யாவைச் சாப்பிட்டு வந்தால், அவர்கள் எலும்பு மற்றும் பற்கள் பலம் அடையும்.வாழைப்பழத்தில் இருப்பதைவிட பொட்டாசியம் சத்து கொய்யாவில் கூடுதலாக உள்ளது.

உடலில் சேரும் நச்சுக்களை வெளியேற்றி, செல்களைப் புதுப்பிக்கும் திறன்கொண்ட 'ஆன்டி ஆக்சிடன்ட்' ஆப்பிள், மாதுளை, வாழைப்பழம், திராட்சை அனைத்தையும்விட, கொய்யாவில் அதிகம் இருக்கிறது என்று ஆராய்ச்சி முடிவுகள் சொல்கின்றன.
தோல் பிரச்னைகளுக்கு தீர்வைத் தரும். மலச்சிக்கலை நீக்கும். கல்லீரலைப் பலமாக்கும். புற்றுநோயாளிகளுக்கு மிகவும் நல்லது.

வாய்ப்புண், வயிற்றுப் புண் உள்ளவர்கள் கொய்யா மரத்தின் கொழுந்தை

தினமும் மென்று விழுங்கினாலே, கை மேல் பலன் கிடைக்கும். இப்படி எல்லாப் பிரச்னைக்கும் தீர்வைத்தந்து ஆரோக்கியத்தைக் காக்கும் கொய்யாப் பழத்தை, 'பழங்களின் சூப்பர் ஸ்டார்' என்கிறார்கள். விலை குறைவாகவும், சத்துக்களின் பெட்டகமாக இருக்கிற கொய்யாவை அனைவரும் சாப்பிடப் பழகிக்கொள்ள வேண்டும்" என்றார்.

தி இந்து

தமிழால் இணைவோம்

**4 ஆண்டுகளுக்குப் பிறகு மதுராந்தகம் பெரிய ஏரி நிரம்பியது_: 8 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்_**



காஞ்சி மாவட்டத்தின் முக்கிய நீராதாரமான மதுராந்தகம் ஏரி 4 ஆண்டுகளுக்கு பிறகு முழு கொள்ளளவை எட்டியது. இதனால் 30 ஏரிகள் மற்றும் 8 கிராமங்கள் பயனடையும் என விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

வங்க கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, வடகிழக்கு பருவமழை பல்வேறு மாவட்டங்களில் கொட்டித் தீர்த்தது. இதில், ஏரி மாவட்டமான காஞ்சிபுரத்திலும் 3 நாட்கள் இடைவிடாமல் கனமழை பெய்தது. இதனால் ஏரி, குளங்கள் தண்ணீர் நிரம்பி வருகின்றன. இதில், பொதுப்பணித்துறை கட்டுப் பாட்டில் உள்ள மதுராந்தகம் பெரிய ஏரி முக்கியமானதாகும். இதன் முக்கிய நீர் வரத்தான கிளியாற்றில் வெள்ள பெருக்கு ஏற்பட்டதால், மதுராந்தகம் ஏரிக்கு 8 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்தது.

இதன் காரணமாக 4,752 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஏரி நேற்று முன்தினம் ஒரே நாள் இரவில் அதன் முழு கொள்ளளவான 21.5 அடியை எட்டியது. தற்போது 609 மில்லியன் கனஅடி நீர் தேங்கியுள்ளது. இன்னும் ஒரு அடியை நீர்மட்டம் தாண்டும்பட்சத்தில் கலங்கல் வழியாக உபரி நீர் வெளியேறும். 4 ஆண்டுகளுக்கு பிறகு ஏரி நிரம்பியுள்ளதால், அப்பகுதி பொதுமக்கள் நீர் நிரம்பிய ஏரியை பார்ப்பதற்காக கூட்டம், கூட்டமாக வருகின்றனர்.

நீர் நிரம்பியதை அடுத்து பொதுப் பணித்துறை மற்றும் வரு வாய்த் துறையினர் ஏரியின் நீர்வரத்து மற்றும் அணையின் பாதுகாப்பு, கரையை ஒட்டியுள்ள கிராமங்கள் ஆகியவற்றை தொடர்ந்து கண் காணித்து வருகின்றனர்.

இதுகுறித்து, மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் பர்கத்பேகம் கூறியதாவது: மதுராந்தகம் ஏரி முழு கொள்ளளவை எட்டியுள்ளதால், உபரிநீர் வெளியேறும் கால்வாயை ஒட்டியுள்ள 8 கிராமங்களில் வெள்ளபெருக்கு ஏற்படும் நிலை உள்ளது. எனினும், தற்போது மழையின் அளவும் ஏரிக்கு நீர் வரத்து 300 கனஅடியாகவும் குறைந் துள்ளதால் வெள்ள அபாயம் தற்காலிகமாக நீங்கியுள்ளது.

அதேநேரம், தாழ்வான பகுதி யில் உள்ள கிராமங்களில் மேற்கொள்ள வேண்டிய பாது காப்பு ஏற்பாடுகள் அனைத்தும் தயார் நிலையில்

வைக்கப் பட்டுள்ளது. ஏரியை பார்ப்பதற் காக மக்கள் வந்து செல்வதால், அசம்பாவிதங்கள் ஏற்படுவதை தடுக்கும் வகையில் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர் என்றார்.

ஏரி நிரம்பியதால் மகிழ்ச்சி அடைந்துள்ள அப்பகுதி விவ சாயிகள், 'ஏரி முழுவதுமாக நிரம்பி உபரிநீர் வெளியேறினால், 30 ஏரிகளுக்கு நீர் வரத்து ஏற் பட்டு 8 கிராமங்களில் உள்ள 8 ஆயிரம் ஏக்கர் விளைநிலம் பாசன வசதி பெறும்' என தெரி வித்தனர்.

இருப்பினும் நீர்வரத்து எதிர்பார்க்கப்படும் 30 ஏரிகளின் வரத்து கால்வாய்கள் தூர்வாரப் படாமல் உள்ளது. இதனால் நீர் வீணாகும் நிலை உள்ளதால், பொதுப்பணித்துறையினர் போர்க்கால அடிப்படையில் அவற்றை தூர்வார வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத் துள்ளனர்._

**99 ஏரிகள் நிரம்பின :** ஏரி மாவட்டமான காஞ்சிபுரத்தில் 912 ஏரிகள் உள்ளன. பொதுப்பணித்துறை கட்டுபாட்டில் உள்ள இந்த ஏரிகள் கனமழை காரணமாக நீர்வரத்து அதிகரித்து வேகமாக நிரம்பி வருகின்றன. மாவட்டத்தின் முக்கிய குடிநீர் மற்றும் பாசன ஏரிகளாக கருதப்படும் தென்னேரி ஏரி 13 அடி, உத்திரமேரூர் ஏரி 7.5, மதுராந்தகம் ஏரி 21.5 அடி தண்ணீர் நிரம்பியுள்ளது. இதேபோல், செங்கல்பட்டு வட்டத்தில் 44, காஞ்சிபுரம் வட்டத்தில் 49, மதுராந்தகம் வட்டத்தில் 6 என மொத்தம் 99 ஏரிகள் அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ளன. இவைதவிர 282 ஏரிகள் 75 சதவீதம் மற்றும் 531 ஏரிகள் 50 சதவீதம் நீர் நிரம்பியுள்ளதாக, மாவட்ட பொதுப்பணித்துறை தெரிவித்துள்ளது. மேலும் மழை விட்டு, விட்டு பெய்து வருவதால் தொடர் நீர்வரத்து காரணமாக இந்த ஆண்டு பெரும்பாலான ஏரிகள் நிரம்பும் என கணிக்கப்பட்டுள்ளது.

**சென்னைக்கு குடிநீர் வழங்கும்_ ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு_: தொடர் மழையால் நீர்மட்டம் உயர வாய்ப்பு_**



சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் ஒன்றான புழல் ஏரி தண்ணீர் வற்றி மணல் மேடாகக் காட்சியளித்தது. தற்போது பெய்துள்ள மழையால் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் மணற் பரப்பில் வைக்கப்பட்டிருந்த மோட்டார்கள் அப்புறப்படுத்தப்பட்டன. படம்: ம.பிரபு

தொடர் மழையால், சென் னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி, சோழவரம் உள்ளிட்ட ஏரிகளில் நீர் இருப்பு அதிகரிக்கத் தொடங்கி யுள்ளது. இதன் மூலம் சென் னையை மிரட்டி வந்த குடிநீர் தட்டுப்பாடு அபாயம் சற்று நீங்கி யுள்ளது. மழை தொடரும்பட்சத்தில் இந்த ஏரிகளின் நீர்மட்டம் மேலும் உயர வாய்ப்பு உள்ளது.

வங்கக் கடலில் நிலை கொண் டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் வடகிழக்குப் பருவமழை தமிழகம் முழுவதும் பரவலாக பெய்து வருகிறது. இதன் ஒருபகுதியாக திருவள்ளூர் மாவட் டத்திலும் கடந்த 6-ம் தேதி முதல் கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக மாவட்டத்தில் வறண் டுக் கிடந்த ஏரிகள், குளங்கள், ஆறுகளில் நீர் நிறைந்து காணப் படுகின்றன.

குறிப்பாக, சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஏரிகளான பூண்டி, சோழவரம், புழல், செம்பரம் பாக்கம் ஏரிகளில் நீர் இருப்பு கணிசமாக

அதிகரிக்கத் தொடங்கி யுள்ளது. கடந்த மாதம் 20-ம் தேதி நிலவரப்படி குடிநீர் தரும் ஏரிகளின் மொத்த கொள்ளளவான 11057 மில்லியன் கனஅடியில் நீர் இருந்தது 324 மில்லியன் கனஅடி மட்டுமே. தற்போது பெய்த மழை யால் மொத்த ஏரிகளின் நீர் இருப்பு நேற்றைய நிலவரப்படி 1720 மில்லியன் கனஅடியாக உயர்ந்துள்ளது.

இதன்படி 3,231 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட பூண்டி ஏரியின் நீர் இருப்பு நேற்றைய நிலவரப்படி 204 மில்லியன் கன அடி. அதே போல், 881 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட சோழவரம் ஏரியில் நேற்றைய நீர் இருப்பு 160 மில்லியன் கன அடியாக இருந்தது. அதேபோல், 3,300 மில்லியன் கன அடி கொள் ளளவு கொண்ட புழல் ஏரியின் இருப்போ 471 மில்லியன் கன அடி. அதே போல், 3,645 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட செம்பரம்பாக்கம் ஏரியின் நேற்றைய நீர் இருப்பு 885 மில்லியன் கன அடியாக உயர்ந்துள்ளது.

இதனால் சென்னைக்கு குடி நீர் விநியோகிப்பதில் சிறிது காலத்துக்கு சிரமம் இருக்காது. மேலும் சென்னையை மிரட்டி வந்த குடிநீர் தட்டுப்பாடுக்கு தற்காலி கமாக முற்றுப்புள்ளி வைக்கப் பட்டுள்ளதாக குடிநீர் வழங்கல் வாரிய வட்டாரங்கள் தெரி விக்கின்றன._

www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**தொடர்மழை: சாத்தனூர் அணை நீர்மட்டம் 100 அடியாக உயர்வு**



திருவண்ணாமலை, நவ.12–

தமிழகத்தில் பெய்துவரும் தொடர்மழை காரணமாக அனைத்து அணைகளும் நிரம்பி வருகின்றன. திருவண்ணாமலை மாவட்டத்தில் பொதுமக்களின் குடிநீர் ஆதாரமாகவும், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள ஏரிகள் மற்றும் விவசாய பாசனத்திற்கு அடிப்படையாகவும் சாத்தனூர் அணை உள்ளது.

திருவண்ணாமலை உள்பட பல்வேறு பகுதிகளுக்கு சாத்தனூர் அணை தண்ணீர்தான் குடிநீருக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதேபோன்று விவசாய நிலங்களும் சாத்தனூர் அணை தண்ணீரையை நம்பி உள்ளன.

சாத்தனூர் அணை 119 அடி கொள்ளளவு கொண்டது. கடந்த அக்டோபர் மாதம் 1–ந் தேதி நிலவரப்படி சாத்தனூர் அணையின் நீர்மட்டம் 74 அடியாக இருந்தது. தொடர்ந்து வடகிழக்கு பருவமழை காரணமாக அணைக்கு நீர்வரத்து தொடங்கியது. இதனால் அணையின் நீர்மட்டம்

படிப்படியாக உயர்ந்து வந்தது. கடந்த 9–ந்தேதி அணையின் நீர்மட்டம் 84.75 அடியாக இருந்தது.

இந்த நிலையில் வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக கடந்த 8–ந்தேதி முதல் திருவண்ணாமலை மாவட்டத்தில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்கத் தொடங்கியது. எனவே, அணையின் நீர்மட்டமும் வேகமாக உயர்ந்து வருகிறது.

9–ந்தேதி 84.75 அடியாக உயர்ந்து, நேற்று முன்தினம் 89.80 அடியாக இருந்தது. தொடர்ந்து அணைக்கு வினாடிக்கு 8,750 மில்லியன் கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. இதனால் நேற்று பகலில் அணையின் நீர்மட்டம் 97.10 அடியாக உயர்ந்தது. இன்று காலை 100 அடியை எட்டியது. 4 ஆண்டுகளுக்கு பிறகு நீர்மட்டம் 100 அடியை எட்டியுள்ளது. தண்ணீர் வரத்து தொடர்ந்து அதிகளவில் உள்ளதால் 105 அடிக்கு மேல் நீர்மட்டம் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சாத்தனூர் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதாலும், தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாலும் அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் மற்றும் கலெக்டர் ஞானசேகரன் ஆகியோர் சாத்தனூர் அணை மற்றும் தென்பெண்ணை ஆறு ஆகியவற்றை நேரில் பார்வையிட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

தற்போது அணைக்கு வரும் நீரின் அளவு குறையாமல் இருந்தால் வருகிற 17–ந்தேதி அணை திறக்க வாய்ப்புள்ளதாகவும், நீர் வரத்து குறைந்தால் 119 அடி வரை தண்ணீர் தேக்கிவைத்து டிசம்பர் மாதம் திறக்க வாய்ப்பு உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.